இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 100 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 04 – செவ்வாய்க்கிழமை 19 நவம்பர் 2024 – கோவை ★ ★ 12 பக்கங்கள்

Established: 10.8.1942 - Volume: 83 - Issue 100 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 04 - Tuesday 19 November 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


# மக்கள் கொண்டாடும் திராவிட மாடல் ஆட்சி





**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

மாவட்டந்தோறும் கள ஆய்வு என்று நாமக்கல்லில் அறிவித்து, கோவை, விருதுநகர் மாவட்டங்களில் நேரடி ஆய்வை மேற்கொண்ட உங்களில் ஒருவனான நான், நவம்பர் 14, 15 தேதிகளில் அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் நேரடிக் கள ஆய்வை மேற்கொண்டு, இரு மாவட்ட மக்களுக்குமான திட்டங்களை வழங்கி, கழக உடன்பிறப்புகளுடனும் கலந்தாலோசனை நடத்தியது மனதுக்குப் பெரும் நிறைவைத் தந்தது.

அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது, உங்கள் மாவட்டத்திற்கு வருகை தரும் நாள் குறித்த எதிர்பார்ப்பு அதிகமாகும். இதுவரை பார்வையிட்ட மாவட்டங்களைக் காட்டிலும் எங்கள் மாவட்டத்தில் கழகப் பணிகளை எவ்வளவு சிறப்பாக செய்திருக்கிறோம் பாருங்கள் தலைவரே என்று பெருமையுடன் உங்கள் களப்பணிகளை என் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவரவர் மாவட்டத்திற்கான அரசின் திட்டங்களை வலியுறுத்திப் பெறுவீர்கள் என்பதை உங்களில் ஒருவனான நான் நன்றாக அறிவேன்.

நவம்பர் 14-ஆம் நாள் மாலையில் சென்னையிலிருந்து திருச்சிக்குச் சென்றபோது, கழகத்தின் முதன்மைச் செயலாளர் - மலைக்கோட்டை மாவட்டத்தின் மாவீரர் கே.என்.நேரு அவர்கள் உள்ளிட்ட திருச்சி மாவட்டக் கழக நிர்வாகிகளும் அரசு அதிகாரிகளும் அன்புடன் வரவேற்று மகிழ்ந்தனர். அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்திற்குப் பயணமானேன். வழியெங்கும் மழைத் தூறல். என் மனதிலோ எத்தனையோ நினைவுச் சாரல்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.வைத் தொடங்கி, அதன்பின் கழகத்திற்காகக் கொள்கைப் பிரச்சார நாடகங்களை நடத்தியபோது, ஜெயங்கொண்டத்தில் உள்ள அண்ணா சிலை அருகே அடிக்கடி பிரச்சார நாடகத்தில் பங்கேற்றிருக்கிறேன்.

இளைஞரணிச் செயலாளராகத் தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் இரு வண்ணக் கொடிகளை ஏற்றிவைத்து, படிப்பகங்களைத் திறந்து வைத்து, கிளைகளை உருவாக்கிய நேரத்திலும் ஜெயங்கொண்டத்திற்கு வந்திருக்கிறேன். அந்த ஊர்க்காரரான கழகத்தின் நட்சத்திரப் பேச்சாளர் அண்ணன் வெற்றிகொண்டானுடன் மேடைகளில் பேசியிருக்கிறேன்.

சிறிய ஊராக இருந்த ஜெயங்கொண்டத்தில் மிகச் சிறிய பயணியர் விடுதி உண்டு. அங்கு பல முறை தங்கியிருந்த நினைவுகள் வந்து சென்றன. அந்த விடுதியைப் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பாக மாற்றி அமைத்திருக்கிறார். பொதுவாக, முதலமைச்சர்கள் மட்டுமல்ல, அமைச்சர்களே கூட அரியலூரில் சற்று பரந்த - விசாலமான பயணியர் விடுதியில் தங்குவதுதான் வழக்கம்.

ஜெயங்கொண்டத்தில் புதிய தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டு விழா என்பதால், ஜெயங்கொண்டத்திலேயே தங்கலாம் என்று நான் சொல்லிவிட்டேன். சிறிய விடுதியாக இருந்தாலும் மனதுக்கு இனிய விடுதியாக அது இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக

**உங்களில் ஒருவன்**

இருந்தபோது ஜெயங்கொண்டத்தில் தங்கியிருந்ததும் நினைவுக்கு வந்தது. நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர்தானே, அரியலூரைத் தனி மாவட்டமாக உருவாக்கிக் கொடுத்த முதலமைச்சர். அந்த வகையில், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு நானும் முதல்முறையாக ஜெயங்கொண்டம் பயணியர் விடுதியில் தங்கியதில் மகிழ்ந்தேன். மாவட்டக் கழகச் செயலாளரும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களுக்கும் தனது மாவட்டத்தில் உள்ள சிறிய பயணியர் விடுதியில் முதலமைச்சர் தங்கியிருக்கிறார் என்பதில் மகிழ்ச்சி.

நவம்பர் 15ஆம் நாள் காலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினருமான அருமைச் சகோதரர் திருமாவளவன் அவர்கள் அந்த விடுதியில் என்னை சந்தித்தார். அவருடைய நாடாளுமன்றத் தொகுதிக்குள்தான் அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இரு சட்டமன்றத் தொகுதிகளும் உள்ளன.

கடந்த ஆண்டு பெரம்பலூரில் சிப்காட் தொழிற்பூங்காவுக்கு அடிக்கல் நாட்டி, விரைவாக செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தபோதே, அந்த விழாவில் திருமாவளவன் எம்.பி. அவர்கள் உரையாற்றும்போது, அரியலூர் மாவட்டத்திற்கும் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்.

**அருமைச் சகோதரர் திருமாவளவனின் உள்ளத்தை நான் அறிவேன். மூத்த சகோதரராக என்னிடம் உண்மையான பாசம் காட்டும் திருமாவளவன் அவர்களும் என் உறுதியான செயல்பாடுகளை அறிவார். திராவிட மாடல் அரசிடம் அவர் வைத்த கோரிக்கை ஓராண்டுக்குள் நிறைவேறி, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா அமைவதற்கு தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமாவளவன் அவர்களும் அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்து வந்திருந்தனர். அரியலூர் மாவட்டத்தில் பழைய நீதிமன்றக் கட்டடங்களே இருப்பதால், புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர். விடுதியில் விரைவாகச் சந்திப்புகளை முடித்துவிட்டு, ஜெயங்கொண்டம் அரசு நிகழ்ச்சிக்கு செல்வதற்காக வெளியே வந்தபோது, மழைத் தூறலுக்கிடையிலும் மக்கள் திரண்டு நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்பளித்தனர்.

காரில் இருந்தபடி கையசைத்து அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்ட நான், மக்கள் மழையில் நின்று வாழ்த்துவதைப் பார்த்ததும், கீழே இறங்கி நடந்து சென்று, அவர்களுடன் கை குலுக்கி வாழ்த்துகளை ஏற்றுக்கொண்டேன். கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டேன்.

**வழிநெடுக மக்கள் நின்று வரவேற்பளிப்பதை, இன்றைய அரசியல் களத்தில், 'ரோடு ஷோ' என்கிறார்கள். ஷோ என்றால் காட்சி எனப் பொருளாகும். நம்மைப் பொருத்தவரை, இது வெறும் காட்சியும் அல்ல, மக்கள் நமக்கு காட்சிப் பொருளும் அல்ல. திராவிட மாடல் அரசின் நல்லாட்சிக்குக் கிடைக்கின்ற மகத்தான வரவேற்பு. தி.மு.க. அரசின் திட்டங்களால் பயன்பெற்று வரும் மக்களின் திருவிழாக் கொண்டாட்டம்.**


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


# 'புதுமைப் பெண்' திட்டத்தால் கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## 'தி இந்து' நாளேடு தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு!

**சென்னை, நவ. 19 -**

**தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் 'புதுமைப் பெண்' திட்டத்தால், மாநில கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதாக பாராட்டு தெரிவித்து 'தி இந்து' (17.11.2024) ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

'தி இந்து' ஆங்கில நாளேட்டில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-

மாநிலத் திட்டக் கமிஷன் (SPC) மேற்கொண்ட புதுமைப் பெண் திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டில், 13,681 கூடுதல் மாணவர்கள் இந்த முயற்சியால் பயனடைந்துள்ளனர். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மட்டும் டிப்ளமோ படிப்புகளை வழங்கும் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கை 6.9 சதவீதம் அதிகரித்துள்ளது.

அவர்களில், 38.6% ஆதிதிராவிடர்கள், 34.4% மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் 24.8%, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC). இந்த மதிப்பீட்டில், சேலத்தில் 8.9%, கல்லூரி மாணவர் சேர்க்கை அதிகமாக இருப்பதாகவும், சென்னை 5.8% என்றும்; தருமபுரி 5.5%; திருவண்ணாமலை 5.2%; நாமக்கல் 4.8%; மற்றும் கடலூர் 4.1% என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



THE HINDU ON SUNDAY

Tamil Nadu

'Pudhumai Penn scheme has led to increase in college enrolment'

Educational impetus

உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்க, தமிழ்நாடு அரசு, புதுமைப் பெண் திட்டம் எனப்படும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. இந்த முயற்சியின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6வது வகுப்பு முதல் 12வது வகுப்புகளில் இருந்து இளங்கலை, டிப்ளமோ, ஐ.டி.ஐ. அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பாடப்பிரிவை முடிக்கும் வரை, அவர்களுக்கு மாதம் 1,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. ஊக்கத்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் பயனாளிகளின் எண்ணிக்கை 2,30,820. அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 17,032 (7.38%) மாணவர்கள் பயனடைந்துள்ளனர். நாமக்கல் 13,312 (5.77%) தர்மபுரி 11,915 (5.16%); சென்னை 11,468 (4.97%); திருவண்ணாமலை 11,146 (4.83%); மற்றும் கோயம்புத்தூர் 10,777 (4.67%) என பயனடைந்துள்ளனர்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிகபட்சமாக 84,806 (36.7%) பயனாளிகளாக உள்ளனர். அதைத் தொடர்ந்து பிற்படுத்தப்பட்ட குடும்பங்களில் உள்ளவர்கள் 70,598 (30.6%); ஆதிதிராவிடர் குடும்பங்கள் 70,546 (30.6%); பழங்குடியினர் 3,025 (1.3%); மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட 1,642 (0.7%). 170 (0.1%) மாணவர்களுக்கு சமூக வகை வெளியிடப்படவில்லை. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) தரவரிசையில் உள்ள நிறுவனங்களிலும் சுமார் 7,110 பயனாளிகள் பயின்று வருவதாக மதிப்பீட்டுத் தரவு காட்டுகிறது.

கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் கணிசமான பங்கு ஈரோடு, திருவள்ளூர், தென்காசி, விழுப்புரம் மற்றும் சிவகங்கை போன்ற மாவட்டங்களில் உள்ள கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகும். கணக்கெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் ஒப்பீட்டளவில் அதிக டீனேஜ் கர்ப்பங்கள் இருப்பதால், திருமண வயதை அதிகரிப்பதில் இந்தத் திட்டம் ஒரு பங்கைக் கொண்டிருக்கக்கூடும் என்று மாநில திட்டக் கமிஷன் தெரிவித்துள்ளது.

இந்த உதவியை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதையும் அது ஆய்வு செய்துள்ளது, மேலும் பயனாளிகள் முதன்மையாக கல்லூரி மற்றும் போக்குவரத்து செலவுகளை ஈடுகட்ட இதைப் பயன்படுத்துகின்றனர். பல சந்தர்ப்பங்களில், வேலைச் சந்தையில் தேவைப்படும் திறன்களைப் பெறுவதற்கு உதவக் கூடிய கட்டணப் படிப்புகளில் பெண்கள் சேர்ந்துள்ளனர். நகர்ப்புறங்களில் உள்ள பெண்களை விட கிராமப்புற பெண்களே இத்திட்டத்தின் மூலம் அதிகம் பயனடைந்துள்ளனர்.

மதிப்பீட்டின் ஒரு பகுதியாக இருந்த கிட்டத்தட்ட 150 மாணவர்கள், ஒற்றைப் பெற்றோர் அல்லது பெற்றோர் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மதிப்பீடு குறித்த முழு அளவிலான அறிக்கையை மாநில திட்டக் கமிஷன் விரைவில் தயாரித்து, அது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இவ்வாறு 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.